வதிரி

# பூவற்கரையான் பதிகமாலை



கண. எதிர்வீரசிங்கம்

வதிரி

# பூவற்கரையான் பதிகமாலை

கண எதிர்வீரசிங்கம்

வெளியீடு

**வியாசன்**

கயட்டை, ஆவரங்கால் கிழக்கு,

புத்தூர்

வதிரி
பூவற்கரையான் பதிகமாலை

நூலாசிரியர் : கண எதிர்வீரசிங்கம்

வெளியீடு : கிருஷ்ணராஜன் வியாசன்.
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

முதற் பதிப்பு : 2007 ஆடி.

பதிப்புரிமை : எதிர்வீரசிங்கம்
ஷியாம்கிருஷ்ணர்
யாவத்தை,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

கணனி அச்சு : மதுரன் கிறா(f)பிக்ஸ் &
ஒவ்செற் பிறின்ரேர்ஸ்,
அல்வாய்.

உ

சிவமயம்

## சமர்ப்பணம்

கருவறை சுமந்தவளும், கல்வியை வளர்த்தவரும்
திருவடி தொழுதிடும் தாய்தந்தையே - விருப்புடனே
பூவற்கரை பதிகமாலையை பாதங்களில் சாற்றுகின்றேன்
நாவதனில் வந்துறைவீர் நயந்து





உ

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

*தொலைபேசி* : 021 222 2870 14.07.2007.

## ஆசிச் செய்தி

அன்புசார் பெருத்தகையீர் :

அல்வாய் வதிரி எனும் ஊரில் ஆட்சிபுரியும் முழுமுதற் கடவுளாகிய கணபதிக்கு பூவற்கரையான் பதிகமாலை என்ற இறுவெட்டும் புத்தகமும் வெளியிடுவதை இட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

பூதகணங்களின் தலைவனாகிய விநாயகப் பெருமானின் புகழையும் பூவற்கரைப் பிள்ளையாரின் பெருமையையும் எடுத்து விளக்கவல்ல ஊடகமாகிய இறுவெட்டு, புத்தக வெளியீடு ஒரு சிறந்த படைப்பாகும். ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் இறை வழிபாடு, ஆலயத்தின் பெருமைகளை இன்றைய நாளைய சமுதாயத்திற்கு சென்றடையும் வண்ணம் இவ்வாறான வெளியீடுகள் இந்து சமய வளர்ச்சிக்கு வழிவகுக்கப்படுகின்றன.

ஆகையினால் இப்பணியை மேற்கொண்டு பாடலை ஆக்கி வெளியிடும் கண.எதிர்வீரசிங்கம் அவர்களுக்கு ஆசிகிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

உ

சிவமயம்

பிரம்மஸ்ரீ அ. பிரேமச்சந்திரக் குருக்கள்
(சமாதான நீதவான்)
(வதிரி பூவற்கரைப் பிள்ளையார் உற்சவகாலப் பிரதம குருக்கள்)

## ஆசிச் செய்தி

"தமிழோடு இசைபாட மறந்தறியேன்" எனும் திருநாவுக்கரசர் கூற்றுக் கிணங்க தமிழாலே இசைப்பாடலை யாத்து சைவத் தொண்டினை மேற்கொள்ளும் பக்த அடியார்கள் வரிசையில் வதிரி பூவற்கரையான் புகழ் மாலையை திரு.கண எதிர்வீரசிங்கம் வெளியிட்டு இசை கூட்டி பாட முயன்றமை பாராட்டுக்குரியது. இவர் சிறந்த பக்தன். தினமொரு முறையேனும் பூவற்கரைப் பிள்ளையாரின் கோயில் வாசலில் வந்து வழிபடாமல் இருக்கமாட்டார். இப்பாடலை எழுதுவித்தவனும் இப்பிள்ளையாரே எனக் கூறுவார். "அவனருளே கண்ணாகக் காணில் அல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்றெழுதிக் காட்டவெண்ணாதே" எனக் கூறியபடி இவரது இப்பாரிய படைப்பு இவரின் பக்தி மார்க்க ஈடுபாட்டைக் காட்டுகின்றது. இவர் பாடல்கள் அனைத்தும் எம்பெருமானின் மணிமுத்து மாலைகள். இவரது இப்புனிதப் பணியானது மேலும் தழைத்தோங்கவும் குடும்ப சகிதம் சுகமே நீடுபுகழ் கமழ வாழவும் பூவற்கரையானை வேண்டுவதுடன் இவர் பணி சிறந்து விளங்கவேண்டி எனது ஆசிச் செய்தியை வழங்குகின்றேன்.

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

சுபமஸ்து
சுபம்

செல்வி. பாக்கியலஷ்மி நடராஜா
தலைவர்/ இசைத்துறை
சிரேஸ்ட விரிவுரையாளர்
யாழ்பல்கலைக்கழகம்

ஆசியுரை

நாம் ஆரம்பிக்கும் வேலைகள் எவ்விதத் தடங்கலோ இடையூறோ இன்றி நிறைவேற எம்மையெல்லாம் வழிநடத்துபவர் விநாயகப் பெருமான் ஆவார். தனக்கு மேலாக எவரும் இல்லாத தனித்தலைவனாக விளங்குபவர் விநாயகப்பெருமான். அத்தகைய தனித் தலைவனிற்கு அமைதியான இயற்கையழகுடன் கூடிய சிறப்பான இடத்தில் ஆலயம் அமைவதென்பது மிகவும் பொருத்தமானதாகும். பூவற்கரைப்பிள்ளையார் ஆலயம் .ஆலமரம் அரசமரம் நிழல் பரப்ப இயற்கையழகுடன் அமைந்திருப்பது காண்போர் மனத்தைக்கொள்ளை கொள்வதாயுள்ளது.

சிறுதெய்வ வழிபாட்டுத் தலமாக ஆரம்பமான இக்கோயில் தற்போது மிகவும் சிறந்த முறையில் அழகுற அமைக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வருவது இக்கோயிலின் சிறப்பினை எடுத்துக்காட்டுவதாயுள்ளது. தவத்திரு குன்றக்குடி அடிகளார், பித்துக்குளி முருகதாஸ், முத்தமிழ்க்காவலர் ம.பொ.சி, கல்கி

இரா.கிருஷ்ணமூர்த்தி போன்ற பல சான்றோர்கள் வருகைதந்த இவ்வாலயத்தில் இசைக்கென ஒரு தனியான இடம் கொடுக்கப் பட்டுள்ளதை அறியமுடிகிறது. இக்கோயில் பற்றிப் பல பாடல்கள் இயற்றப்பட்டும் பாடப்பட்டும் வருகின்றன.

இவ் இறுவட்டில் பாடப்பட்டுள்ள பாடல்கள் இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானின் அருட்சிறப்பையும். கோயிலின் சிறப்பையும் மக்கள் பெருமான்மீது கொண்டுள்ள பக்தியையும் நம்பிக்கையையும் பாடலாசிரியர் கண எதிர்வீரசிங்கம் அவர்களால் அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இப் பாடல்கள் எல்லோராலும் விரும்பிப் பாடக்கூடியவாறும் கேட்டு இரசிக்கக்கூடியவாறும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு வெளிவருகிறது. இவ் இறுவட்டு இவ்வாலயத்தின் சிறப்பிற்கு மேலும் ஒரு அணிகலனாகத் திகழும் என்பது மறுக்கமுடியாதது. இவ் இறுவட்டு சிறப்புற வெளிவர அரும்பாடுபட்ட கவிஞர் கண எதிர்வீரசிங்கம் மற்றும் அனைத்துக் கலைஞர்களுக்கும் ஒலி அமைப்பாளர் களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

19.07.2007.

சீ.சாந்தநாதன்
*முகாமையாளர்*
வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயம்.

## *வாழ்த்துச் செய்தி*

புதுக் கவிதைகள், வசனக் கவிதைகள், கைக்கூ கவிதைகளின் வரவுக்குப் பிற்பாடும் மரபுக் கவிதைகள் தொடர்ந்தும் புதிது, புதிதாகப் பல்வகைத் தரங்களில் வெளிவந்து கொண்டுதானிருக்கின்றன.

திரு கண.எதிர்வீரசிங்கத்தின் கவிதைத் தொகுதி கடும் இலக்கணப் பயன்படுத்துகையைக் கொண்டிராமல் உதவியின்றிப் புரிந்துகொள்ளக்கூடியவாறு அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகக் கருதமுடியும்.

இக்கவிதைத் தொகுதியின் படைப்பாளி தனது கவிதைகளின்மூலம் கல்வி, தமிழ், அகதிகள்நிலை, தமிழ்மக்கள் நிலை போன்றவற்றை முதன்மைப் படுத்திச் செல்வதை அவதானிக்கமுடிகிறது.

பூவற்கரையான் வீற்றிருக்கும் வதிரியூரின் நல்நிலையே தன்பேரவாவென மரபுக் கவிதைப் பண்புகளும், மரபுக்கவிதை, இலக்கணங்களும் கலையாத பாடல்களின்மூலம் பூவற்கரையானை வேண்டி அவன்தாள் பணிந்து கிடப்பது போற்றுதற்குரிய இன்னொரு விடயமாகும்.

கவிஞர் ஒருவரைக் கண்டறிந்தமை மகிழ்ச்சியைத் தருகிறது.

திரு.கண எதிர்வீரசிங்கம் அவர்களின் முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

நவாலியூர் நா.செல்லத்துரை
– நவாலியூரான் –

*இறை ஆசி வேண்டி நானும் வாழ்த்துகிறேன்*

இறப்புஇலாப் பிறப்பாயுள்ள இறைவன்வதிரிப் பூவற்கரை
சிறப்புஎலாம் பெறட்டுமென்றே சீர்ஞானப் பிள்ளையாராய்
கோயில்கொண்டு வாழுகிறார் கண்விழித்த மக்கள்இறை
பக்திகொண்டு போற்றியந்தப் பிள்ளையாரை வணங்கிடுவர்

பூவற்கரைப் பிள்ளையாரைப் பக்தரெல்லாம் பாடிடத்தன்
நாவிலுறை நற்தமிழால் எதிர்வீர சிங்கம்என்ற
பக்தன்இன்று பாவடித்தான் பிள்ளையாரை மனம்பதித்து
சந்தங்கொண்ட பாக்களிவை செகம்புகழப் பரவிடட்டும்

"வீடிழந்து பொருளிழந்து இதுவரைநாம் அனுபவித்த
சீரிழந்து போனதனால் பரவசத்தை இழந்துவிட்டோம்
மறுபடியும் எமதுவாழ்வில் வளம்பெருக வேண்டும்நாங்கள்
எழுவழியை நீயெமக்குத் தந்தருள்வாய் விநாயகனே.

சித்தியைத்தா நாமிழந்த ஆறுதலை மறுபடிதா
பக்திவைத்து உனைத்தொழுதோம் வேண்டும்நல்ல ஞானத்தைத்தா
உனையன்றி வேறுயாரை நாங்களிங்கு நம்பிடுவோம்
நிலைகுன்றி நாங்களிங்கு வாழும்நிலை எமக்குவேண்டாம்.

எமக்குவந்த வேதனையும் ஏக்கங்களும் சோதனையும்
சுமக்கவொண்ணாத் துயரங்களும் ஈடுசெய்ய முடிந்திடாத
அழிவுகளும் இழப்புக்களும் அகம்நிறைந்து பெருகிப்பெரும்
பதிவுகளாய் இருப்பதனால் பிள்ளையாரே நீதான்இனி

இவைகளெமை எட்டிடாது இதயத்தை அரித்திடாது
கதைகளென எம்மினத்தில் வளர்ந்திடாது காத்திடுவாய்
பாராமுகம் உனக்குவேண்டாம் சங்கரனின் முதல்மகனே
நாவாலுனை வேண்டுகிறோம் நீயேஇனி எமக்குக்கதி"

என்றெல்லாம் தனதுபாவில் ஆசிரியர் வேண்டுகிறார்
துன்பெல்லாம் அகற்றுபவர் பிள்ளையாரே என்பதனால்
ஆகவேதான் தான்புனைந்த பூவற்கரைப் பதிகத்திலே
ஞானமேநல் வடிவாய்நிற்கும் அவர்புகழைப் பாடுகிறார்.

இறைபுகழைச் சொல்லுமந்த இனியநல்ல பாடல்பத்தும்
நிறைபுகழைப் பெற்றிடட்டும் இறையாசி வேண்டுகிறேன்
அந்தநல்ல பாடல்களை ஆக்கித்தந்த ஆசிரியர்
இந்தமண்ணின் மீதுநீடு வாழ்ந்திருக்க ஆசிக்கிறேன்.

2007.07.05.

திரு.ஆ.சிவநாதன்
*அதிபர்*
*யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை*

*வாழ்த்துரை*

சமய வழிபாட்டு முறைகள் குன்றிய காலங்களில் நாயன்மார்கள் மக்களை சமயத்தின் பால் ஈர்க்கும் வகையில் மேற்கொண்ட முக்கிய நடவடிக்கை ஆலயங்கள் தோறும் சென்று அங்கு அமர்ந்து அருள்பாலிக்கும் இறைவன் பெருமையை தேவாரங்களாக பாடியமையாகும். அத்தகைய திருமுறைகளே சைவசமய மக்களை இன்றும் சமய உணர்வை, உள்ளத்தில் உணர்வை வழிப்படுத்துவதாக அமைகின்றது.

நாயன்மார்களின் அருட்பாடல்கள் அருளொளி மிக்கவையாகும். அவர்களின் உள்ளத்து அன்பினை வெளிப்படுத்துவதாகவும் அதைப்பாடும் அடியவர்களது உள்ளங்களை உயர்வு படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

ஆன்மாக்கள் லயப்படும் இடங்கள் ஆலயங்கள் ஆகும். ஆண்டவன் எங்கும் உறைந்திருந்தாலும் பசுவின் மடியிலிருந்து பால் சுரப்பதுபோன்று இறைவனது அருளும் ஆலயங்களிலேயே சுரக்கின்றது. எனவே ஆன்மாக்கள் ஆன்மீக வழியில் முன்னேற ஆலய வழிபாடு அவசியமாகின்றது. இவ்வகையில் மக்களை ஆலய வழிபாட்டுக்கு வழிப்படுத்துவோர் மிகச்சிலராகும்.

இவ்வகையில் இன்று ஆலயங்களின் சிறப்புக்களை பாமாலையாகப் பாடி அவ் இறைவனின் பெருமையை உணர்த்திப் பரப்பி வருகின்ற ஒரு கலாசாரம் யாழ்ப்பாணத்தில் பரவி வருகின்றமை போற்றுதற்குரியதாகும். அவ்வரிசையில் திரு.கண எதிர்வீரசிங்கம் அவர்களும் பூவற்கரையான் புகழைப் பதிகமாலையாகப் பாடியுள்ளமை போற்றுதற்குரியதாகும். பூவற்கரையான் அருகிருந்து அவனை வழிபட்டு அவன் அருள் பெற்ற திறத்தையும் அவன் ஆலய மகோற்சவத்தில் நடைபெறும் விழாக்களையும் சிறப்பித்துப் பாடியதுடன் இன்றைய தமிழ்மக்களின் அவல வாழ்க்கையை பார்த்திருக்கிறாயா? என்று வினாவும் வகையில் அமைந்துள்ளமை தமிழ் சைவ மக்கள் அனைவரையும் ஐங்கரனின் பெருமையையும், ஆலயப் பெருமையையும் உணர்ந்து ஆலய வழிபாட்டுக்காக வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது. கீர்த்தனை வடிவில் பத்துப் பாடல்களாக இசையுடன் பாடும் வகையில் பதிக மாலையாக அமைந்துள்ளது.

இப்பதிக மாலையைப் பாடியவரும் பாடி வழிபடுபவர்களும் ஐங்கரனின் அருள்பெற்று அவலங்கள் நீங்கி அருளொளி பெறுவர் என்பது திண்ணம். இம்மாலையை வழங்கிய திரு.கண எதிர்வீரசிங்கம் நீண்டகாலம் வாழ்ந்து இதுபோன்ற பாமாலைகளை வழங்க வேண்டுமென ஐங்கரனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

19.07.2007.

**கலாநிதி (திருமதி) கலைவாணி இராமநாதன்**
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

## பூவற்கரையான் பதிகமாலை – 2007

*அணிந்துரை:*

'பூவற்கரையான் பதிகமாலை' என்னும் இச்சிறு நூலைப் படிக்கும் எவருக்கும் விநாயகப் பெருமான் மேல் அளவற்ற பக்தியுண்டாகும். நெல்லியடி - வதிரிப்பகுதியில் பூவற்கரைப் பதியிலே கோயில் கொண்டருளிய விநாயகர்மீது திரு.கண எதிர்வீரசிங்கம் என்பார் அருமையான நல்ல தலைப்புக்களில் பத்துப் பாமாலைகளைச் சிறப்பாகப் பாடியுள்ளார். எம்பெருமான் கோயில் கொண்டுள்ள திருப்பதியின் இயற்கை எழில், அழகு, கிராமத்தின் சிறப்பு, அடியவர்களது பக்திரசம் யாவும் இப்பாடல்களில் நன்றாக அமைந்துள்ளன. பாடல்களின் இடையே புராணக்கதையின் தத்துவமும் இடம் பிடித்துள்ளது. இரண்டாவதாக வரும் பாடலில்
"மாங்கனி பெற்றிடவே மதிநிறைவாகி - நீயும்
மாதா பிதா உலகமென்று உணர்த்துகிறாய்" என

வருமடிகளில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதனை விளக்கியிருப்பது இன்றைய இளம் தலைமுறையினர் உணரவேண்டிய விடயமாகும். ஐந்தாவது பாடலை நோக்கும்போது

"வடம் பிடித்து நாமெல்லாம் போகையிலே - மன
வன்மமெல்லாம் துகளாகிப் போகுமையா"

என்பதில் தேர்வடம் பிடித்து வருகையில் எம்மிடமுள்ள ஆணவமும் அகங்காரமும் தேரடியின் கீழ்ப் பொடிபடும் என்ற மெய்யுணர்வும் அனைவராலும் சிந்திக்கத் தக்கது.

பொதுவாக ஆசிரியரின் சிந்தனை முழுவதும் எம்பெருமானின் அளவற்ற கருணைமீதும் திருவருளின் மீதும் அவன் புகழ்பாடுவதிலுமே பதிந்திருக்கின்றது. அத்துடன் நமது மக்களது வேதனைகள், இழப்புக்கள், போர்க்காலச் சூழலில் அலைந்தழிந்து ஏதிலிகளாகி வாடும் நிலையும் பாடல்களில் நன்கு புலப்படுத்தியிருப்பது மனதை மிக வருத்தமடையச் செய்யும். பத்தாவது பாடல் முழுவதுமே நாட்டுக்காகவும் மக்கள் நலம் வேண்டியும் பாடும் வரிகள் அனைவரையும் வேதனைப்படவைப்பதாகும்.

"யாரை இனி நம்புவதோ...
போரை இங்கு பார்க்கிறேன் - துடிதுடிப்
போரைக் கண்டு தினம் வாடுகிறேன்...
பாரெங்கும் போரொலிகள்...
பார்வையிலே அவலங்கள்...
ஊரினிலே அகதிகள்...
கரமைந்தும் இருந்தென்ன ஐங்கரனே
இரு கரம் நீட்டி..."

எம் மக்களைக் காப்பாயோ? என்ற ஆசிரியரின் ஆதங்கம் ஐங்கரனின் அருளைப் பாடி இரந்து நிற்கும் பாணியில் வெளிப்படுகின்றமை எல்லோர் மனதையும் தொடுவதாயுள்ளது.

இதனை வாசிக்கும்போது எனக்கு "யாரொடு நோவோம்- யார்க்கெடுத்துரைப்போம். ஆண்டநீ அருளில்லையானால் வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய் வருக என்றருள் புரியாயே" என்ற மணிவாசகரின் திருவாசகம் நெஞ்சிலே ஒலிக்கின்றது. "வருந்தாதே ஏழை மனமே - வரும் காலம் நல்ல காலம் - மனம் போல இன்பம் நேரும் - திருநாளும் வந்து சேரும்" என்று எப்போதோ கேட்ட கவிதை வரிகளை இங்கு நினைவு கொண்டு, நம்பிக்கையோடு பூவற்கரைத் தும்பிக்கையானைக் கைகூப்பித் தொழுது இறைஞ்சுவோம். எம்பெருமான் ஆசிரியருக்கும் எல்லா நலன்களையும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்தித்து அமைகிறேன்.

எல்லோருக்கும் சுகமுண்டாகட்டும் மங்களமுண்டாகட்டும்
அனைவரிடத்திலும் சாந்தியும் சமாதானமும் நிலவட்டும்

05.07.2007.

உ
சிவமயம்

**சைவசித்தாந்த பண்டிதர், அருட்பிரபாகர சீலர், சிவாகம உபதேச வாசஸ்பதி**
**சிவஸ்ரீ.தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**
*B.A. Dip.in.Ed, M.A. Teacher.*
**பிரதமகுரு,இந்துமதகுரு ஆதீனகர்த்தா, தலைவர், நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில், அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம், இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன், வடபத்திரகாளி தேவஸ்தானம், தும்பளை, பருத்தித்துறை.**

## மதிப்புரை

ஒரு சொல்லா லுளந்தாய்மை யாச்சே - சிவசிவ
ஒன்றிரண் டென்றிடும் பேதமும் போச்சே.
இருவினை யென்பதும் பேச்சே
என்னை அறிந்தேன் இடரற்றுப் போச்சே!!

சொல்லாலே வாய்த்த சுகத்தை - சிவசிவ
சுகிப்பதே யல்லாமற் சொல்லவொண்ணாதே
கல்லாதே யாவுங் கற்றேனே
காயத்தை யும்என்றன் கைக்குள்வைத் தேனே.

உருகி உருகி நின்றேன் உணர்ந்தேன்
ஒன்றையும் காணாமல் ஏங்கி நான் நின்றேன்
அப்போது மருமம் இது பெருமருமம் "சிவாசிவா வயநமசி" என்பதை உள்ளத்தால் உணர்ந்தேன்.

அன்பையும் அறிவையும் திறம்பட செயல்படுத்துவது தாயன்பே. தாயன்பு இல்லையென்றால் தன்னுடைய தொழிலையும் மனைவினையும் மற்ற எவற்றையும் திறமையுடன் இயக்க முடியாது ஆத்மாலயத்திற்கு ஆன்மநேசம் ஆலய வழிபாடு அத்துடன் குலதெய்வ உபாசனை அத்தெய்வத் தொடர்பு மனத்தின் உள்ளுணர்வை வெளிக்காட்டும். இதனை "தன்னையறிந்தால் தானம் தவமேது" என்றார் யோகர் சுவாமிகள். அன்பர் கண எதிர்வீரசிங்கம் நல்ல புரை தேர்ந்த அறிவுடையவர். பூவற்கரை விநாயகன் திருவருள் அவர் உள்ளத்தில் பதிந்துவிட்டது. உள்ளத்தினாலே உள்ளணர்வைத் தரிசிப்பவன் சிறந்த ஆன்மபலம் பெற்றவனே இப்பலம் தெய்வசிந்தையால் தெய்வ அனுபவத்தினால் கிடைக்கும்போது வேறு சிறந்த பலம் தேவையில்லை.

அல்வாய் பூவற்கரையான் புகழ் பாடும் பதிகமாலை முழுமையும் பாடிப் பார்த்தறிந்தேன். அவ்வளவும் சமய விழுமியங்களையும் புராணக் கதைகளையும் அக்கோவில் நடைமுறைகளையும் கொடியேற்றம், வேட்டைத்திருவிழா, ரதத்திருவிழா, தீர்த்தத்திருவிழா, மணவாழக்கோல உற்சவம் என்பவற்றை நினைவுபடுத்தும் வகையில் அமைந்து காணப்படும். 4ம், 5ம், 6ம், 7ம் பாடல்களில் விளக்கி நிற்கின்றன.

பாடல்களின் தொகையறா, பல்லவி, அனுபல்லவி, சரணம் என்பன இசையுள்ளம் கொண்டு கேட்கும்போது அல்லது பாடும்போது இனிமையான இன்பத்தைத் தரும். அவரது முதலாவது பாடல் "அதிகாலை உந்தனது மணியோசை" சமய விழுமியம் அதாவது மணியோசை கேட்பது காதில் துயில் எழுப்புதல் என்பது ஆதிகாலத்தில் அண்டசராசரங்களைப் படைத்த போது இறைவன் பிராணனை காதினூடாகவே படைத்தான். அதனால்தான் கும்பாபிஷேக காலத்தில் இறைவனின் காதில் மூல அட்சர செபத்தையும் கூறுவர். அதுபோல ஆன்மா ஜீவயாத்திரை செல்லும்போதும் காதுக்குள் தேவாரம் படிப்பர் அல்லது திருமுறை

இசைப்பர். இந்த உன்னத தத்துவ அடிப்படையில் அன்பர் அவர்கள் "காதிலே வந்து துயிலெழுப்பும் இசைபாடி துதிப்போமே. பூவற்கரையான் புகழ்பாடி உள்ளத்திரை தன்னிலே வந்துதிக்கும் வினைபோக்கி" என்றார். இது இன்றும் திருப்பள்ளி எழுச்சி, திருப்பாவை ஓதல் போன்ற சமய விழுமியத்தைத் தொடர்ந்து காவி நிற்பதை காணலாம். இது பல்லவியே இடம்பெற அனுபல்லவியும் விநாயகப் பெருமானுடைய தோற்றம், அதாவது "மௌத்தின் உட்பொருள் ஆனைமுகன், மோதகப்பிரியன், பானைவயிறன் ஆகிய வடிவுடைய இறைவனே எனக்கு வெல்லும் ஞானமும் யோகமும் தருபவனே" என்று பாடுகிறார். சரணத்தில் முதல் வழிபாடு மாங்கனி பெற்றமை கணபதியான் பெருமை மாதா பிதா உலகம் என உணர்த்தும் சம்பவம் "மாங்கனி பெற்றிடவே மதி நிறைவாகி" என்று வேண்டுகிறார்.

3வது பாடலில் "கோடி இன்பம் பெருகுதையா பூவற்கரைப் பதியில் வெள்ளிக்கிழமைகள் தோறும் பஜனைப் பாடல்கள் பாடிவரும் வளக்கம் உண்டென்பதையும் "தம்பமதை தந்து நின்றார் முப்பொருளும் துலங்கிடவே" மகோற்சவ தத்துவத்தை 3ம் பாடல் சரணத்தை கூறத்தவறவில்லை.

"வீதி எங்கும் தோரணங்கள் நிறை குடங்கள்" என்ற 7வது பதிகத்தில் இயற்கையை இறைவனாக வடிவமைத்து தம்முடைய ஆழ்ந்த கற்பனையை இறைவன் ஊடாக காணுகின்றார். 8வது பாடலில் எங்கள் நாட்டின் அவலநிலை என்பவற்றை மாற்றியமைக்கும் "பூவற்கரை புண்ணியனே" என்றுவேண்டுகின்றார். "நீ சூரரை அழித்து தேவர்களை காத்து நின்றாய் அது போல் தமிழ் மாந்தரையே மீட்டிடையா" என்ற வரிகள் சிறந்த வேண்டுகை ஆகும்.

அதுபோல் 9வது பாடல் எங்கள் யாழ்ப்பாண பிரதேச நிலை. இன்றைய கால சூரத்தனம், அரசியல் அவலங்கள் அனைத்தையும் "இருகரம் கூப்பி உனை கெஞ்சுகிறேன் என்

உணர்வுகள் அழிந்திடுமோ அஞ்சுகிறேன். இரு கரம் மீட்டி எம் நிலையைப் பாராயோ" என்று கேட்டு 10வது பாடலில் "இசையோடு உனைப்பாட வருவாயப்பா" எனப்பாடி அப்பாடல் முழுவதும் உயிரோட்டம் நிறைந்தனவாக அமைத்துப் பாடியுள்ளார்.

அன்பர் கண எதிர்வீரசிங்கம் அவர்கள் பரந்த நோக்கும் சிறந்த கவியாளும் தன்மையும் கொண்டவர் என்பதை அவர்கள் பாடல்மூலம் உணர முடியும். கவிதா சாமர்த்துவம் எல்லோர்க்கும் இருந்தாலும் இறையோடு இசைந்து வருவது அருமை. கண எதிர்வீரசிங்கம் அவர்கள் "பூவற்கரையான் அறங்காவலர் சபையில் உறுப்பினராக, சிறந்த நடத்துனராக, முகாமையாளராக அங்கம் வகித்து "பூவற்கரையான் அருளை இன்று பதிகமாலை ஊடாக பாடியமை அவரின் பக்திப்பரவச நிலையையும் உணரமுடிகின்றது.

ஒரு ஆலயத்தின் மீது பதிகம், விருத்தம், அந்தாதி போன்ற செய்யுள் உரைகள் பாடல்கள் எழுகின்றது ஆயின் அவ்வாலயத்தின் மூலவர் மூர்த்திகரம் கீர்த்தி உடையது என்பதே பொருளாகும். அந்தக் கீர்த்தியுள்ள மூர்த்தியின் அருளைப் பெற்றவர்கள் தெய்வீகக் கவிகள் என்ற பெருமைக்கு உரியவர்களாவர். யாப்புகள் எதுவுமின்றி உணர்வுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பாடுபவர்கள் அருட்கவிகளே. நின்ற மாத்திரத்தில் நினைத்த மாத்திரத்தில் கவிபாடும் அருட்கவி என்ற திறத்தினை அன்பர் அவர்கள் பெற்று பூவற்கரையான் திருவருள் அவர்மீது சுரக்க நாம் பூசிக்கின்ற இலட்சுமணன் தோட்டப் பிள்ளையார், சிவயோகர் அருள் தரும் அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார், நெல்லண்டை ஸ்ரீபத்திரகாளி இலட்சுமணன்தோட்டம் ஸ்ரீவீரமாகாளி, வடபத்திரகாளி அம்மன் திருவருள் கிடைக்க சிறந்த மதிப்புரையும், வாழ்த்துரையும், ஆசியுரையும் வளங்கி அமைகின்றோம்.

சுபமஸ்து

18.07.2007.

## நன்றியுரை

'அவனின்றி அணுவும் அசையாது' தனித்துவமான மூலவனாக எமையெலாம் வழிநடாத்தி ஐம்பத்தொன்பது ஆண்டுகள் அடியேனையும் இப்பூவுலகில் வாழ்வதற்கு இடமளித்த விநாயகன் பாதங்களை வணங்குகிறேன் ஏதோ ஒருவகையில் தன் சுவட்டினை மனிதன் பதித்து விடுவது பலபேருடைய வாழ்க்கைக் குறிப்பிலிருந்து அறியக்கூடியதாயுள்ளது. அந்தவகையில் இப் பதிகமாலையினை பூவற்கரையான் என்மூலமாக புனையவைத்து வெளிக்கொணர்ந்துள்ளான்.

என்னை அன்போடு நேசிக்கின்ற, கவித்துறையில் வளர்ந்து வருகின்ற தம்பி சிவ.கணேசனின் பார்வைக்கு பதிகமாலையினைக் கொடுத்தபோது அவற்றினை மிகவும் உன்னிப்பாக வாசித்தபின்னர் கவித்துறையில் பட்டறிவுள்ள கவிஞர் கோவிநேசனிடம் காட்டி ஆசிபெறுமாறு ஆலோசனை வழங்கியதோடு, என்னை உற்சாகமூட்டியதற்கிணங்க கவிஞரின் பார்வைக்குக் கொடுத்து ஆசியும் பெற்றேன்.

யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீட சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.ஆ.சத்தியசீலன் மூலமாக பதிகமாலையினை இசைத்துப்பாடிய சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.தவநாதன் றொபேட், அவரது மாணவர்களாகிய வாத்தியக்கலைஞர்களுடன் இறுவட்டினை பூரணமாக்கி சகல வழிகளிலும் அதி உச்ச பங்களிப்பினை வழங்கியுதவிய அன்புள்ளம் கொண்ட திரு. கதிரவேல் தர்மராசா அவர்களுக்கு நன்றியுடையவனாகின்றேன்

கலைஞர் குழுவினருடன் இணைந்து தனது திறமைகள் யாவற்றினையும் எனது பாடல்களில் ஒன்றிணையவிட்டும், ஒத்தாசைகளையும், நல் ஆலோசனைகளையும் வழங்கி உற்சாகமூட்டி வழிநடாத்தி இறுவட்டு சிறப்புற அமைய பங்களிப்பாற்றிய திரு.சிவ.கணேசன் அவர்களை உள்ளத்திலிருத்தி பூசிக்கின்றேன்

இப்பதிகமாலை நூலுருவில் வெளிவருவதற்கு சிறந்த ஒழுங்குகளை அமைத்துதவிய இளம்எழுத்தாளரும் ஆசிரியருமான திரு.இரா.இராஜேஸ்கண்ணன் அவர்களையும் மறந்திடாது மனதில் பதித்துள்ளேன்

என் உள்ளக்கிடக்கையினை அருமைச் சோதரன் கிருஷ்ணராசன், மருகன் சத்தியராஜன் ஆகியோரிடம் தெரியப்படுத்திய போது, ஆண்டவன் அருள் பாலித்துள்ளான் அதனை நிறைவேற்றுங்கள் எனக்கூறி பலவழிகளிலும் கைகோர்த்து செயல்பட்டதோடு, தனது மகன் செல்வன் வியாசன் வெளியீடாக வரச்செய்தும்

உதவிகள் புரிந்துள்ளனர். என்றென்றும் அவர்கள் நன்றிக்குரியவர்கள். அவர்களால் வழங்கப்பட்ட உற்சாகத்தின் வெளிப்பாடே இவ்வெளியீடுகளாகும்

வெளியீட்டிற்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப்பா, அணிந்துரை, மதிப்புரை வழங்கி உதவிய பெரியோர்கள், அறிஞர்களாகிய நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம், எமது ஆலய பிரதம அர்ச்சகர், உற்சாவகால பிரதமகுரு, கலாபூசணம் நவாலியூரான், எமது ஆலய முகாமையாளர், அதிபர் யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை, சாமணந்தறை ஆலடி பிள்ளையார் பிரதமகுரு, யாழ்பல்கலைக்கழக இந்து நாகரித்துறை சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழக இசைத்துறை தலைவர், அன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய செஞ்சொற் செல்வர் திரு.ஆறுதிருமுருகன் அவர்களுக்கும் இசையமைத்துப் பாடிய திரு.த.றொபேட் மற்றும் கலைஞர்கள், வெளியீட்டு நிகழ்வில் பங்குபற்றி உரைநிகழ்த்தியோருக்கும், முதல் இறுவட்டினையும் நூலினினையும் பெற்று சிறப்பித்த திருவாளர்கள் வல்லிபுரம். அமிர்தலிங்கம், கார்த்திகேசு. வெற்றிவேல், சிறப்புப்பிரதிகள் பெற்ற யாபேருக்கும் விளம்பர அன்பளிப்பு செய்துதந்த மடத்துக்கடவை திரு.அ.சதீஸ்குமார் ஆகியோர்களுக்கு என் அன்பான நன்றிகள்.

இறுதியாக இறுவட்டு, நூலும் வெளிவருவதற்கு பலவழிகளிலும் ஒத்தாசைகளும், ஆலோசனைகளும் வழங்கியும் கையெழுத்து பிரதியினை வழுபார்த்து

உதவிய அருமை மகள் செல்வி துவாரகா எதிர்வீரசிங்கம் அவர்களுக்கும் கணனிப்பிரதியாக பாடல்களை ஆக்கியுதவிய திரு.க.வரதவேல் அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்

யாவத்தை, கனா.எதிர்வீரசிங்கம்.

அல்வாய் தெற்கு

வதிரி

20.07.2007

# "ஆவலுடன் பாடுகின்றேன் ஐங்கரனே"

இராகம் : ஹம்சத்வனி　　　　　　　　　　　தாளம் : ஆதி

**தொகையறா**

ஆதிசைவத் தமிழுடனே அறந்திகழும் நற்றலமாம்
ஓதுமுயர் பூவற்கரையின் ஓங்கார நாயகனே
வேதியர்கள் சூழ்ந்துவரும் வேழமுகத்து விநாயகனே
பாதமலர் பணியுமென் பாவினிலே நிறைவாயே!

**பல்லவி**

ஆவலுடன் பாடுகின்றேன் ஐங்கரனே! வதிரி
பூவற்கரை பொற்பதியின் மூலவனே!

- ஆவலுடன்...

**அனுபல்லவி**

காவலனாய் கதியருளும் காரணனே! எந்தன்
பாவினிலே பொருளாகும் வாரணனே!

- ஆவலுடன்...

சரணம்

அழகொளிரும் ஆலயத்தை காண்கையிலே - நெஞ்சில்
ஆனந்த பரவசமும் பொங்குதையா!
வளங்களுடன் பதியென்றும் மிளிர்ந்திடவே – குஞ்சர
வதனனே அருளமுதம் தாருமையா!

- ஆவலுடன்...

எம்மினிய பக்தரெலாம் மனமுவந்து – மகா
கும்பாபிஷேகம் செய்துனையே தொழுகின்றோம்
வம்சமெலாம் கல்வியில் ஓங்கிடவே - மகா
கணபதியே ஆசானாய் வாருமையா!

- ஆவலுடன்...

2

## "அதிகாலை உந்தனது மணியோசை"

*இராகம் : பூபாளம்* *தாளம் : ஆதி*

### பல்லவி

அதிகாலை உந்தனாலய மணியோசை – மெல்ல
காதிலே வந்து துயிலெழுப்பும் இசைபாடி
துதிப்போமே பூவற்கரையான் புகழ்பாடி – உள்ளத்
திரைதனிலே வந்துதிக்கும் வினைபோக்கி - அதிகாலை...

### அனுபல்லவி

மௌனத்தின் உட்பொருளே! ஆனைமுகனே! – நல்ல
மோதகப் பிரியனே! பானைவயிற்றோனே!
ஞாலத்தில் நின்தயவில் வாழ்வதற்கே - வெல்லும்
ஞானமும் யோகமும் தருபவனே! - அதிகாலை...

### சரணம்

கணங்களுக்கு அதிபதியே கணபதியே!
கந்தனுடன் வந்தருளும் குணநிதியே!
வணங்கிடவே தோப்புக் கரணமிட்டே
விடிகாலை கருமங்கள் தொடங்குவோமே! - அதிகாலை....

மாங்கனி பெற்றிடவே மதிநிறைவாகி – நீயும்
மாதாபிதா உலகென்று உணர்த்தி நின்றாய்!
தாங்கொணா துயருடனே நாமிருக்க – பஞ்ச
கரந்தூக்கி அபயமென்றும் அளித்துநிற்பாய்! - அதிகாலை!.

3

## "கோடியின்பம் பெருகுதையா"

*இராகம்: கௌரிமனோஹரி* *தாளம்: ஆதி*

### பல்லவி

கோடியின்பம் பெருகுதையா கொடியேறும் நாள்தனிலே
நாடியதை பார்த்திடவே நீர்சொரியும் விழிகளிலே!
- கோடியின்பம்..

### அனுபல்லவி

வேதியர்கள் சூழ்ந்துநின்று மந்திரங்கள் ஓதிடவே
நீதியுயர் பூவற்கரையானின் ஏற்றிவைக்கும் கொடிகாண!
- கோடியின்பம்...

### சரணம்

தம்பமதை தந்துநின்றார் முப்பொருளும் துலங்கிடவே
அம்பிகையின் புதல்வனிற்கு மஹோற்சவம் தொடங்கிடவே
வெம்புகின்ற அடியவரும் பரவசமாய் திகழ்ந்திடவே
விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகனின் கொடிகாண
- கோடியின்பம்..

ஆடிவரும் போதினிலே உன்னழகு கோலமதை
ஆயிரம் மலர்களாலே அலங்கரித்து பார்ப்போமே
பாடிவரும் பஜனையிலே உன்புகழை சொல்லிடவே
பாவருளித் தருபவனின் கொடித்தம்பம் காணவிங்கே
- கோடியின்பம்..

4

## "ஆடிவாறான் ஓடிவாறான்"

**இராகம் : மாயாமாளவகௌளை** **தாளம்: ஆதி**

**பல்லவி**

ஆடிவாறான் ஓடிவாறான் காடுமலை தேடிவாறான்
பாடறிந்து வினைகளையும் வேட்டைதனை ஆடவாறான்!
- ஆடிவாறான்...

**அனுபல்லவி**

மாவடியில் மகிமைதரும் அண்ணமார் ஆலயத்தில்
காவடிகள் பறையொலிகள் புடைசூழ அம்புவில்லுடனே!
- ஆடிவாறான்..

**சரணம்**

ஆட்டமாடி பக்தரெலாம் ஆனந்தம் பொங்கிடவே
கூட்டத்தில் அவன்நாமம் பரவசமாய் சொல்லிடவே
நாட்டமுடன் நல்லனவே செய்திடவே பிள்ளையாரும்
நாடியெங்கள் குறைபோக்க கைகளிலே அம்புவில்லுடனே!
- ஆடிவாறான்...

வேப்பிலையும் கற்பூரச் சட்டிகளும் தொடர்ந்துவர
விருப்புடனே பாலரெலாம் சல்லாரி இசையெழுப்ப
பூவற்கரை தலம்விடுத்தே பார்வதியாள் மைந்தனிவன்
காவலனாய் குதிரைமீதே அம்புவில்லும் ஏந்தியிங்கே!
- ஆடிவாறான்...

## 5

## "அழகுரதம் அமைந்திடவே அனுக்கிரகம்"

**இராகம் : நாட்டைக்குறிஞ்சி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

அழகுரதம் அமைந்திடவே அனுக்கிரகம் - தந்து
அடியவரை ஆட்கொள்ளும் அப்பனே! - அழகுரதம்..

**அனுபல்லவி**

தலமதிலே தனிச்சிறப்பு தோன்றிடவே
தலைமகனே வந்து அருளாட்சி செய்வாயப்பா! - அழகுரதம்..

**சரணம்**

சித்திரத் தேரில் வருபவனே- என்றும்
சித்திகள் அள்ளித் தருபவனே!
புத்தியிலே உறைபவனே! ஆனைமுகனே! எங்கள்
பூவற்கரை யிலமர் பாலகனே! - அழகுரதம்...

வடம்பிடித்து நாமெலாம் செல்கையிலே — மன
வன்மமெலாம் துகளாகி போகுமையா!
தேரசைந்து வருகின்ற வீதியெங்கும் - பண்
தேவார ஒலியெலாம் கேட்குதையா! - அழகுரதம்...

சிற்பங்கள் கதைபகரும் தேரமைத்து — உந்தன்
சிங்கார எழுந்தருளும் காட்சிகண்டோம்!
கற்பக தருவாகி வரமனைத்தும் - தொந்தி
கணபதியே தந்திடவே வணங்குகின்றோம்! - அழகுரதம்...

6

## "மெய்யுருகி மனம்நெகிழ"

**இராகம் : ரேவதி** **தாளம்: ஆதி**

### பல்லவி

மெய்யுருகி மனம்நெகிழ பருகிடும் தீர்த்தமையா - உன்னால்
நெய்யுருகி நீராகும் நிலையிலென் சுமைகளையா!
- மெய்யுருகி...

### அனுபல்லவி

இதயத்தில் உனைவைத்து பூஜைகள் செய்கின்றேன் - சூரிய
உதயத்தில் உன்வதனம் கண்டுகண் விழிக்கின்றேன்!
- மெய்யுருகி...

### சரணம்

ஈசான மூலையிலே தீர்த்தமாடும் ஏரம்பனே
வாசமலர் சோலையாம் பூவற்கரையின் காரணனே!
ஈசனுடன் உமையவளும் காட்சிதரும் பிள்ளையே
இன்ப விநாயகனே! அருளாலே நிறைந்திடுவாய்!
- மெய்யுருகி...

கண்களிலே வீசுகின்ற ஒளியாலே — பக்தி
கனிவோடு நாட்களையே களிக்கின்றோம்!
ஒன்றுபட்டு பக்தரெலாம் அரோகராவென்றே - சொல்லி
ஓங்காரன் தீர்த்தத்திலே குளிக்கின்றோம்!
- மெய்யுருகி...

## 7
## “வீதியெங்கும் தோரணங்கள், நிறைகுடங்கள்”

*இராகம் : மத்தியமாவதி* *தாளம்: ஆதி*

**பல்லவி**

வீதியெங்கும் தோரணங்கள் நிறைகுடங்கள் பெருவிழா!
ஆதிசிவன் மூத்தவனின் மணவாளக் கோலவிழா!
- வீதியெங்கும்...

**அனுபல்லவி**

வதிரியிலே மக்களெலாம் பக்தியுடன் காணும்விழா
மதிநிறைந்த இளைஞரெலாம் பிள்ளையாரை சுமக்கும்விழா
- வீதியெங்கும்...

**சரணம்**

வீடுதோறும் விநாயகனின் அருளாட்சி புரியும்விழா
வாசல்தோறும் கோலமிட்டே வரவேற்கும் திருவிழா
தேடுகின்ற செல்வமெலாம் அவனாலே பெருகும் விழா
தேவர்குலம் காத்துநின்ற லம்போதரனின் மகாவிழா!
- வீதியெங்கும்...

வானுமிங்கு உந்தனுக்கு குடைபிடிக்க
வளர்மதியும் இங்குனக்கு ஒளிகொடுக்க
கதிரவனின் கதிர்களெலாம் மலர்தொடுக்க
வதிரியிலே விக்கினங்கள் அழிந்தொழிய
- வீதியெங்கும்...

## 8
## 'கலைநிறை கணபதியே"

*இராகம் : மிஸ்டசிவரஞ்சினி* *தாளம்: ஆதி*

**பல்லவி**

கலைநிறை கணபதியே – தஞ்சம்
கோரினோமே! நின்னருட் பதிதனிலே! - கலைநிறை...

**அனுபல்லவி**

நிறைபெறும் வாழ்வுதனையே – அச்சம்
நீக்கியே தந்தருள் பக்திகணபதியே! - கலைநிறை...

**சரணம்**

கோடியின்னல் சூழுகின்ற போதினிலே
கூவியுன்னை அழைப்போமே நேரினிலே!
தேடிவந்து வினையாவும் வேரறுப்பாய்
தேவனே! பூவற்கரை புண்ணியனே! - கலைநிறை...

வீடிழந்து பொருளிழந்து உறவிழந்தே – உன்னை
நாடிவந்து சரண்புகுந்தே துயரிழந்தோம்!
கூடிநின்றே சந்நிதியை தொழுதிடவே – கண்ணில்
காட்சிதந்து அகதிநிலை மாற்றிநின்றாய்! - கலைநிறை!.

கஜமுகா சூரனையன்று அழித்தவனே – தேவர்
குலந்தனை முன்பொருகால் காத்தவனே!
முக்கண்ணனே பூவற்கரையின் முத்தானவனே – தமிழ்
மாந்தரையே மீட்டிடையா ஓங்காரனே! - கலைநிறை!.

9

## "இசையோடு உனைப்பாட வருவாயப்பா"

**இராகம் : ஹம்சாநந்தி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

இசையோடு உனைப்பாட வருவாயப்பா — தமிழ்
இழையோடும் சந்தமெலாம் தருவாயப்பா!

- இசையோடு...

**அனுபல்லவி**

திசைநான்கும் என்பாடல் கேட்டிடவே — நல்ல
இசைஞான லயமாகி ஒலிப்பாயப்பா!

- இசையோடு...

**சரணம்**

நாதத்தின் தலைவனின் முதற்கொழுந்தே — எழில்
பூவற்கரை பதிதனின் குலக்கொழுந்தே!
மாதவமே செய்துனையும் பெற்றோமே — கவி
மேவிடும் பாங்கினையும் கற்றோமே!

- இசையோடு...

ஆறுதலைத் தருபவனே ஐங்கரனே — குன்றின்
ஆறுமுக சுவாமிக்கு மூத்தவனே!
மாறுதலை நின்னருளால் காண்போமே — என்றும்
மங்களமே தந்திடவே வாழ்வோமே!

- இசையோடு...

10

## "யாரைஇனி நம்புவதோ"

***இராகம் : அகீர்பைரவி*** ***தாளம் : ஆதி***

**பல்லவி**

யாரைஇனி நம்புவதோ! கணேசா! — எங்கும்
யாதுமாகி நிற்பவனே உனையன்றி!- யாரைஇனி...

**அனுபல்லவி**

போரை இங்கு பார்க்கின்றேன் - துடிதுடிப்
போரைக் கண்டுதினம் வாடுகின்றேன்!
தேவரெலாம் போற்றிநின்ற வித்தகனே — எழில்
பூவற்கரை கோயில்கொண்ட தத்துவனே!
- யாரைஇனி...

**சரணம்**

பாரிலெங்கும் போரொலிகள் கேட்கவில்லையா — உன்
பார்வையிலே அவலங்கள் தோன்றவில்லையா!
ஊரிலுள்ள அகதிகளை காணவில்லையா — என்
உளமறிந்து உன்தயவும் தரவில்லையா!
- யாரைஇனி...

இருகரம் கூப்பியுனை கெஞ்சுகின்றேன் - என்
உணர்வுகள் அழிந்திடுமோ! அஞ்சுகின்றேன்!
கரமைந்தும் இருந்தென்ன அங்குசனே - இரு
கரம்நீட்டி எம்நிலையை பாராயோ!
- யாரைஇனி...

0 DEC 2019
3440

## என் பார்வையில் ....

வளம் நிறைந்த வடமராட்சிப் பதியில் வதிரி பூவற்கரை விநாயகர் திருக் கோயில் திருவருட் சிறப்பு நிறைந்த அற்புதத் திருக்கோயில். இத்திருக்கோயில் மீது மீளா அடியவராக விளங்கும் கவிஞர் திருமிகு. கண.எதிர்வீரசிங்கம் இனிய பாமாலைபாடி அவற்றினை நூல்வடிவிலும், இறுவட்டு வடிவிலும் வெளியிடுவது அறிந்து மிகவும் அகமகிழ்கின்றேன். புகழ்பூத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைந்தன் எதிர்வீரசிங்கம். இயற்கையாகவே கலைஞானம் மிக்கவர். அவர் யாத்துள்ள எளிமையும், தெளிவும், ரசனையும் மிக்க பாடல்கள் எவரையும் ஈர்க்கவல்லன. தன் உள்ளக் கிடக்கைகளை உரிமையோடு பூவற்கரை நாயகனிடம் முறையிடுவது சிறப்பாகவுள்ளது. மக்களின் துயர்களைத் துடைத்திட்ட அங்குசபாகனை இறைஞ்சும் அழகு அற்புதமாகவுள்ளது. இன்றைய சூழலில் உன்னைவிட யார் எமக்குத் தஞ்சம் என அவர் வேண்டும் வார்த்தை உள்ளத்தை தொடுகிறது. பக்தியோடு பாடப்பட்ட பனுவல்கள் காலம் கடந்தும் நிற்கும் ஆற்றல் பெற்றவை. பூவற்கரை நாயகனுக்குப் படைக்கப்படும் இப்பாமாலை பார் உள்ளவரை நின்று புகழ்பரப்பும் என்பதில் ஐயமில்லை.

செஞ்சொற் செல்வர்
ஆறு. திருமுருகன்
16.07.2007

மதுரன் கிறா(f)பிக்ஸ் & ஒவ்செற் பிறின்ரேர்ஸ் - அல்வாய்
021 2263099, 0776688318